# பிரயாண துஆக்கள்

جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخـبـر



தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# பிரயாண துஆக்கள் 1

## பிரயாணிப்பவருக்காக ஊரில் இருப்பவர் கேட்கும் துஆ

أَسْتَوْدِعُ اللهَ دِيْنَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيْمَ عَمَلِكَ

அஸ்தவ்திஉல்லாஹ தீனக

வஅமானதக வஹ(خ)வாதீம அமலிக

உம்முடைய மார்க்கம், உம்முடைய அமானிதம், உம்முடைய செயலில் முடிவுகள் ஆகியவற்றை அல்லாஹ்விடம் நான் ஒப்படைக்கிறேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அஹ்மத் 4957

# பிரயாண துஆக்கள் 2

## ஊரில் இருப்பவருக்கு பிரயாணியின் துஆ

أَسْتَوْدِعُكَ اللَّهَ الَّذِي لَا تَضِيعُ وَدَائِعُهُ

**அஸ்தவ்திஉகல்லாஹல்லதீ**
**லா தலீ(ض)உ வதாஇஅஹு**

அல்லாஹ்விடம் நான் உங்களை ஒப்படைக்கிறேன். அவன் எத்தகையவன் என்றால் அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்டவை வீணாகி விடாது (அவன் அவற்றுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றான்).

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், இப்னுமாஜா 2295

# பிரயாண துஆக்கள் 3

## பிரயாணி தனக்குப் பிரர்த்திக்குமாறு கேட்கும் போது

زَوَّدَكَ اللّٰهُ التَّقْوٰى وَغَفَرَ ذَنْبَكَ وَيَسَّرَ
لَكَ الْخَيْرَ حَيْثُمَا كُنْتَ

ஸ(ز)வ்வதகல்லாஹுத் தக்வா வக(غ)ப(ف)ர
தன்பக வயஸ்ஸர லகல் கை(خ)ர
ஹய்ஸு(ث)மா குன்த

அல்லாஹ் உமக்கு தக்வாவை வழிச்சாதனமாக ஆக்கித் தருவானாக ! உமது பாவத்தையும் மன்னிப்பானாக ! நீ எங்கிருந்த போதும் உனக்கு நல்லதை எளிதாக்குவானாக !

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், திர்மிதி 3444

# பிரயாண துஆக்கள் 4

## பிரயாணி விடைபெற்ற பின் நபி(ﷺ) அவர்கள் ஓதிய துஆ

اَللّٰهُمَّ اطْوِ لَهُ الْبُعْدَ وَهَوِّنْ عَلَيْهِ السَّفَرَ

அல்லாஹும்மத்(ط)விலஹுல் புஃத
வஹவ்வின் அலைஹிஸ் ஸப(ف)ர

யா அல்லாஹ் ! அவரது பயணத் தொலைவை சுருக்குவாயாக ! இன்னும் அவரது பயணத்தை எளிதாக்குவாயாக !

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், திர்மிதி 3445

# பிரயாண துஆக்கள் 5

## வாகனத்தில் ஏறி அமர்ந்தவுடன் ஓத வேண்டிய துஆ

سُبْحٰنَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ ۙ
وَاِنَّاۤ اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ

ஸுப்ஹானல்லதீ ஸக்( خ )கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன். வஇன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்.

இதன் மீது சக்தியற்றவர்களாக இருந்த எங்களுக்கு, இதனை வசப்படுத்தித்தந்த அவன் மிக்க பரிசுத்தமானவன்.

மேலும், நிச்சயமாக நாம் எங்கள் இறைவனிடத்தில் திரும்பிச் செல்பவர்கள்.

அல்குர்ஆன் 43:13,14

# பிரயாண துஆக்கள் 6-A

## பிரயாண துஆ

اللهُ أَكْبَرُ (٣)

سُبْحَانَ الَّذِى سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ

وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ اللَّهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِى سَفَرِنَا

هَذَا الْبِرَّ وَالتَّقْوَى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضَى اللَّهُمَّ

هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اللَّهُمَّ أَنْتَ

الصَّاحِبُ فِى السَّفَرِ وَالْخَلِيفَةُ فِى الأَهْلِ اللَّهُمَّ إِنِّى

أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوءِ

الْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالأَهْلِ

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 3339.

# பிரயாண துஆக்கள் 6-B

அல்லாஹு அக்பர் (3 முறை)

சுப்ஹானல்லதீ ஸக்(خ)கர லனா ஹாதா, வமா குன்னா
லஹு முக்ரினீன, வ இன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்.

அல்லாஹும்ம, இன்னா நஸ்அலுக பீ(ف) ஸப(ف)ரினா
ஹாதல்பிர்ர வத்தக்வா, வ மினல் அமலி மா தர்ளா(ض).

அல்லாஹும்ம, ஹவ்வின் அலைனா ஸப(ف)ரனா ஹாதா.
வத்(ط)வி அன்னா புஃதஹு.

அல்லாஹும்ம அன்த்தஸ் ஸா(ص)ஹிபு பி(ف)ஸ்ஸப(ف)ரி,
வல்க(خ)லீப(ف)த்து பி(ف)ல்அஹ்ல்.

அல்லாஹும்ம, இன்னீ அஊது பி(க்)க மின் வஉஸா(ث)யிஸ்
ஸப(ف)ரி, வ கஆபத்தில் மன்ழ(ظ)ரி, வ சூயில் முன்கலபி
பி(ف)ல்மாலி வல்அஹ்ல்.

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 3339.

# பிரயாண துஆக்கள் 6-C

நாங்கள் இ(ந்த வாகனத்)தைக் கையாளும் திறன் பெற்றிராத நிலையில், எங்களுக்கு இதைப் பணியவைத்த (இறை)வன் தூயவன். நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்லக்கூடியவர்களாய் உள்ளோம்.

இறைவா ! இப்பயணத்தில் நன்மையையும், இறையச்சத்தையும், நீ திருப்தி அடையக்கூடிய (நற்)செயல்களையும் உன்னிடம் வேண்டுகிறோம்.

இறைவா ! இப்பயணத்தை எங்களுக்கு எளிதாக்குவாயாக! இப்பயணத்தின் தூரத்தைச் சுருக்குவாயாக!

இறைவா ! நீயே என் பயணத் தோழனாகவும் என் குடும்பத்தின் பிரதிநிதியாகவும் இருப்பாயாக!

இறைவா ! பயணத்தின் சிரமங்களிலிருந்தும், நிலைகுலையச் செய்யும் துயரக் காட்சியிலிருந்தும், செல்வத்திலும் குடும்பத்திலும் நிகழ்ந்துவிடும் தீய மாற்றங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

குறிப்பு: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்கேனும் பயணம் புறப்பட்டால், தமது ஒட்டகத்தில் ஏறி அமர்ந்தவுடன் இவ்வாறு பிரார்த்திப்பார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 3339.

# பிரயாண துஆக்கள் 6-D

## பிரயாண துஆ மற்றொரு அறிவிப்பில் காணப்படும் கூடுதலான வாசகங்கள்

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ
الْمُنْقَلَبِ وَالْحَوْرِ بَعْدَ الْكَوْرِ وَدَعْوَةِ الْمَظْلُومِ
وَسُوءِ الْمَنْظَرِ فِي الأَهْلِ وَالْمَالِ

அல்லாஹும்ம, இன்னீ அஊது பி(க்)க மின் வஃஸா(ث)யிஸ் ஸப(ف)ரி, வ கஆபத்தில் முன்கலபி, வல்ஹவ்ரி பஃதல் கவ்ரி, வ தஃவத்தில் மழ்(ظ)லூமி, வ சூயில் மன்ழ(ظ)ரி, பி(ف)ல்அஹ்லி வல்மால்.

பயணத்தின் சிரமங்களிலிருந்தும், துயரத்தோடு திரும்பி வருவதிலிருந்தும், வளர்ச்சியிலிருந்து வீழ்ச்சிக்கு மாறுவதிலிருந்தும், அநீதிக்குள்ளானவனின் (சாபப்) பிரார்த்தனைக்கு உள்ளாவதிலிருந்தும், குடும்பத்திலும் செல்வத்திலும் தீய மாற்றங்கள் நிகழ்ந்து விடுவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு கோருகிறேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் சர்ஜிஸ் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2613

# பிரயாண துஆக்கள் 7

## மேட்டில் ஏறும் போதும், பள்ளத்தில் இறங்கும் போதும் கூற வேண்டியது.

اللّٰهُ أَكْبَرُ , سُبْحَانَ اللّٰهِ

**அல்லாஹு அக்பர்**

**சுப்ஹானல்லாஹ்**

அல்லாஹ் மிகப் பெரியவன்.

அல்லாஹ் தூய்மையானவன்

நாங்கள் (மேட்டில்) ஏறும்போது 'அல்லாஹு அக்பர் – அல்லாஹ் மிகப் பெரியவன்' என்று தக்பீர் கூறி வந்தோம். (பள்ளத்தாக்குகளில்) இறங்கும்போது 'சுப்ஹானல்லாஹ் – அல்லாஹ் (குறைகளிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும்) தூய்மையானவன்' என்று தஸ்பீஹ் செய்து வந்தோம்.

அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அவர்கள், புகாரி 2993

# பிரயாண துஆக்கள் 8

## மேடான பகுதியில் ஏறும் போது ஓத வேண்டியது.

لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ، اللَّهُ أَكْبَرُ

**லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்**

**வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.**
**அல்லாஹ் மிகப் பெரியவன்.**

நாங்கள் இறைத்தூதர்(ﷺ) அவர்களுடன் இருந்தோம். நாங்கள் ஒரு பள்ளத்தாக்கில் (உள்ள மேடான பகுதியில்) ஏறும்போது, 'லா இலாஹ இல்லல்லாஹ் – வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' என்றும் 'அல்லாஹு அக்பர் – அல்லாஹ் மிகப் பெரியவன்' என்றும் கூறி வந்தோம்.

(ஒரு கட்டத்தில்) எங்கள் குரல்கள் உயர்ந்துவிட்டன. அப்போது நபி(ஸல்) அவர்கள், 'மக்களே! உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். (அவசரப்படாதீர்கள். மென்மையாக, மெல்லக் கூறுங்கள்.) ஏனெனில், நீங்கள் காது கேட்காதவனையோ, இங்கு இல்லாதவனையோ அழைக்கவில்லை. அவன் உங்களுடனேயே இருக்கிறான். அவன் செவியேற்பவன். அருகிலிருப்பவன். (இறைவனான) அவனுடைய திருப்பெயர் நிறைவானது. அவனுடைய மதிப்பு உயர்ந்தது' என்று கூறினார்கள்.

**அறிவிப்பாளர்: அபூ மூஸா அஷ்அரீ(ரலி) அவர்கள், புகாரி 2992**

# பிரயாண துஆக்கள் 9

## பயணத்தில் ஓர் இடத்தில் இறங்கியவுடன் ஓத வேண்டிய துஆ

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மா(த்)தி மின் ஷர்ரி மா க(خ)லக்.

அல்லாஹ்வின் நிறைவான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

குறிப்பு:

உங்களில் ஒருவர் பயணத்தில் ஓரிடத்தில் இறங்கி இதை ஓதினால் அவர் அங்கிருந்து பயணிக்கும் வரை அவருக்கு எந்த ஒன்றும் தீங்கு விளைவிக்காது.

அறிவிப்பாளர்: ஹவ்லா பின்த் ஹகீம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2708

# பிரயாண துஆக்கள் 10

## நபி (ﷺ) அவர்கள் பயணத்தில் ஸஹர் நேரத்தை அடைந்தால் ஓதிய துஆ

سَمَّعَ سَامِعٌ بِحَمْدِ اللَّهِ وَحُسْنِ بَلَائِهِ عَلَيْنَا رَبَّنَا صَاحِبْنَا وَأَفْضِلْ عَلَيْنَا عَائِذًا بِاللَّهِ مِنَ النَّارِ

ஸம்மஅ ஸாமிஉன் பிஹம்தில்லாஹி வஹுஸ்னி பலாஇஹி அலைனா ரப்பனா ஸா(ص)ஹிப்னா வஅப்(ف)ழி(ض)ல் அலைனா ஆஇதன் பில்லாஹி மினன் நாரி.

அல்லாஹ் நமக்குப் புரிந்த நல் உபகாரத்திற்காக அவனை நாம் போற்றிப் புகழ்வதைக் கேட்பவர் கேட்டுவிட்டார்.

எங்கள் இரட்சகா! எங்களைப் பாதுகாப்பாயாக ! எங்கள்மீது கருணை பொழிவாயாக! நரக நெருப்பிலிருந்து காப்பாயாக!

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5262

# பிரயாண துஆக்கள் 11

## பிரயாணத்திலிருந்து திரும்பும் போது ஓதும் துஆ

آيِبُوْنَ، تَائِبُوْنَ، عَابِدُوْنَ، لِرَبِّنَا حَامِدُوْنَ

ஆஇபூன தாஇபூன ஆபிதூன
லிரப்பினா ஹாமிதூன்

பாவமன்னிப்புக் கோரி மீண்டவர்களாகவும், எங்கள் இறைவனை வழிபட்டவர்களாகவும், அவனையே போற்றிப் புகழ்ந்தவர்களாகவும் திரும்புகிறோம்.

குறிப்பு : நபி (ﷺ) அவர்கள் (ஓர் அறப்போரிலிருந்து) திரும்பிக்கொண்டிருந்த போது மதீனாவின் மேற்புறத்தில் இருந்து மதீனாவிற்குள் வரும் வரை மேற்கண்ட துஆவை ஓதிக்கொண்டே இருந்தார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2616

# பிரயாண துஆக்கள் 12-A

## பிரயாணத்திலிருந்து திரும்பும் போது ஓதும் துஆ

اللَّهُ أَكبر (٣)

لَا إِلَهَ إِلاَّ اللَّهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ آيِبُونَ تَائِبُونَ عَابِدُونَ سَاجِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ صَدَقَ اللَّهُ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الأَحْزَابَ وَحْدَهُ

**அல்லாஹு அக்பர் (3 முறை)**

லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷய்இன் கதீர்.

ஆஇபூன தாஇபூன ஆபிதூன ஸாஜிதூன லிரப்பினா ஹாமிதூன ஸ(ص)தகல்லாஹு வஃதஹு வநஸ(ص)ர அப்தஹு வஹஸ(ز)மல் அஹ்ஸா(ز)ப வஹ்தஹு

**அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2615**

# பிரயாண துஆக்கள் 12-B

## பிரயாணத்திலிருந்து திரும்பும் போது ஓதும் துஆ

அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையானவர் எவருமில்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே. புகழும் அவனுக்கே. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன்.

பாவமன்னிப்புக் கோரி மீண்டவர்களாகவும், எங்கள் இறைவனை வழிபட்டவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் அவனையே போற்றிப் புகழ்ந்தவர்களாகவும் திரும்புகிறோம்.

அல்லாஹ் தன் வாக்குறுதியை மெய்யாக்கிவிட்டான். தன் அடியாருக்கு வெற்றியளித்தான். கூட்டுப் படைகளைத் தன்னந்தனியாக அவனே தோற்கடித்தான்.

குறிப்பு:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் போர், அல்லது படை, அல்லது ஹஜ், அல்லது உம்ராவிலிருந்து திரும்பும்போது குன்றுகள் அல்லது மேடுகள்மீது ஏறினால், மூன்று முறை தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறுவார்கள். பிறகு இவ்வாறு ஓதுவார்கள்.

**அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2615**

# பிரயாண துஆக்கள் 13-A

## பிரயாணத்திலிருந்து திரும்பும் போது ஓதும் துஆ

اللّٰهُ أَكْبَرُ (٣)

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ

وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ اللَّهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِي سَفَرِنَا

هَذَا الْبِرَّ وَالتَّقْوَى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضَى اللَّهُمَّ

هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اللَّهُمَّ أَنْتَ

الصَّاحِبُ فِي السَّفَرِ وَالْخَلِيفَةُ فِي الأَهْلِ اللَّهُمَّ إِنِّي

أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوءِ

الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالأَهْلِ آيِبُونَ تَائِبُونَ

عَابِدُونَ سَاجِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2612

# பிரயாண துஆக்கள் 13-B

அல்லாஹு அக்பர் (3 முறை)

சுப்ஹானல்லதீ ஸக்(خ)கர லனா ஹாதா, வமா குன்னா லஹு முக்ரினீன, வ இன்னா இலா ரப்பினா ல முன்கலிபூன்.

அல்லாஹும்ம, இன்னா நஸ்அலுக பீ(ف) ஸப(ف)ரினா ஹாதா அல்பிர்ர வத்தக்வா, வ மினல் அமலி மா தர்ளா(ض).

அல்லாஹும்ம, ஹவ்வின் அலைனா ஸப(ف)ரனா ஹாதா. வத்(ط)வி அன்னா புஅதஹு.

அல்லாஹும்ம அன்த்தஸ் ஸா(ص)ஹிபு பி(ف)ஸ்ஸப(ف)ரி, வல்க(خ)லீப(ف)த்து பி(ف)ல்அஹ்ல்.

அல்லாஹும்ம, இன்னீ அஊது பி(க்)க மின் வஉஸா(ث)யிஸ் ஸப(ف)ரி, வ கஆபத்தில் மன்ழ(ظ)ரி, வ சூயில் முன்கலபி பி(ف)ல்மாலி வல்அஹ்ல்.

ஆஇபூன தாஇபூன ஆபிதூன ஸாஜிதூன லிரப்பினா ஹாமிதூன்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2612

# பிரயாண துஆக்கள் 13-C

அல்லாஹ் மிகப்பெரியவன்.

நாங்கள் இ(ந்த வாகனத்)தைக் கையாளும் திறன் பெற்றிராத நிலையில், எங்களுக்கு இதைப் பணியவைத்த (இறை)வன் தூயவன்.
நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்லக்கூடியவர்களாய் உள்ளோம்.

இறைவா ! இப்பயணத்தில் நன்மையையும், இறையச்சத்தையும், நீ திருப்தி அடையக்கூடிய (நற்)செயல்களையும் உன்னிடம் வேண்டுகிறோம்.

இறைவா ! இப்பயணத்தை எங்களுக்கு எளிதாக்குவாயாக! இப்பயணத்தின் தூரத்தைச் சுருக்குவாயாக!

இறைவா ! நீயே என் பயணத் தோழனாகவும் என் குடும்பத்தின் பிரதிநிதியாகவும் இருப்பாயாக!

இறைவா ! பயணத்தின் சிரமங்களிலிருந்தும், நிலைகுலையச் செய்யும் துயரக் காட்சியிலிருந்தும், செல்வத்திலும் குடும்பத்திலும் நிகழ்ந்துவிடும் தீய மாற்றங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

பாவமன்னிப்புக் கோரி மீண்டவர்களாகவும், எங்கள் இறைவனை வழிபட்டவர்களாகவும், சிரம் பணிந்தவர்களாகவும் அவனையே போற்றிப் புகழ்ந்தவர்களாகவும் திரும்புகிறோம்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம் 2612